ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2165/70 - 2020 මාර්තු මස 06 වැනි සිකුරාදා - 2020.03.06

*2165/70 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத்திற்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது நியதிச்சட்ட சபைகளுக்கு உரித்தான ஏதேனும் அசையா அல்லது அசையும் ஆதனத்தை கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு அன்றேல் பாதிப்புக்குக் காரணமாக அமையும் விதத்தில் அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்தும் பணிக்குத் தடங்கலாக அமையும் விதத்தில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான பணிப்புகள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ.(4)(அ) உப உறுப்புரையின்கீழ், தேர்தல் ஆணைக்குழுவினால் ஆக்கப்படுகின்ற அரசாங்கத்திற்கு அல்லது கூட்டுத்தாபனமொன்றுக்கு உரித்தான ஏதேனும் அசையா அல்லது அசையும் ஆதனத்தை தேர்தலொன்றின் போது கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களின் ஊக்குவிப்பு இன்றேல் பாதிப்புக்குக் காரணமாக அமையும் விதத்தில் அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதற்குத் தடங்கலாக அமையும் விதத்தில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகள் பிரகடனம் செய்யப்படுகின்றன.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேக்கர,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய,
*2020, மாச்சு 06.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அரசியலமைப்பின் 104ஆ.(4)(அ) உறுப்புரைக்கமைய, "தேர்தல் காலத்தின்போது அரசுக்கு அல்லது ஏதேனும் அரச கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனமொன்றை" ஏதேனுமோர் அரசியல் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைத் தேர்ந்தெடுப்பதை ஊக்கப்படுத்துகின்ற அல்லது தடுக்கின்ற நோக்கத்துக்காக ஏதேனும் அரசியல் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்துவதைத் தடை செய்யும் தத்துவம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு. அதே போன்று அரசியலமைப்பின் 104 ஆ. (4) (அ) ஆம் உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் விடுக்கப்படுகின்ற பணிப்புகளை அமுல்படுத்துவதற்கு அரசுக்கு உரித்தான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கட்டுப்பட்டுள்ளனராதலால், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அலுவலர்களும் இவ்வேற்பாடுகளுக்கு அமைவாக செயலாற்றுதல் வேண்டும். அதேபோன்று தமது கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து அரசாங்க அலுவலர்களும் இப்பணிப்புக்கு அமைவாக செயலாற்றுகின்றனர் என்பதில் நிறுவனத் தலைவர்கள் பொறுப்பாயிருத்தல் வேண்டும். இப்பணிப்புகள் அரசாங்கத்தின் அமைச்சுக்கள், ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள், அரச வங்கிகள், அரச பல்கலைக்கழகங்கள் போன்ற அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அரசாங்கத்தால் கையேற்கப்பட்டுள்ள கம்பனிகளுக்கும் ஏற்புடைத்ததாகும்.

*02.* **அலுவலர்கள்**

2.1. அனைத்து அரச அலுவலர்களினதும் திறன், அறிவு, அவர்களின் காலநேரம் என்பனவும் அரச ஆதனமாகக் கருதப்படுகின்றது. அரசியல் உரிமைகளுக்கான உரித்துடைய அரச அலுவலரொருவர் கூட தனது அலுவலக நேரத்தில் அதாவது கடமைக்கு அறிக்கையிடப்பட்டுள்ள நேரத்திற்குள் அல்லது கடமை விடுமுறை பெற்றுக் கொண்டுள்ள போது அலுவலகத்திற்கு உள்ளே அல்லது வெளியே அரசியல் ரீதியான ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுதலாகாது. அரசியல் உரிமைகளுக்கான உரித்துடையவர்களல்லாத அலுவலர்கள் விடுமுறை பெற்றுக் கொண்டேனும் அரசியல் ரீதியான பணிகளில் ஈடுபடுதலாகாது.

2.2. எந்தவோர் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அரசியல் நடவடிக்கைகளுக்காக அரச ஆதனங்கள் அதாவது வாகனங்கள், பிரசாரக் கருவிகள், அச்சு இயந்திரங்கள், நிழற்படப் பிரதியெடுக்கும் இயந்திரங்கள், ஊடக சாதனங்கள், தொலைபேசி வசதிகள், எழுதுகருவிகள், சுற்றுலா விடுதிகள் ஆகியவற்றை அல்லது வேறோர் அரசாங்க ஊழியரை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான உரிமை அல்லது அரசுக்குரித்தான எதனையும் பயன்படுத்தும் உரிமை கிடையாது. அவ்வாறு செய்தல் சட்டத்தினால் தண்டனை அளிக்கப்படத்தக்க ஒரு குற்றமாகும்.

2.3. அரசியலமைப்புச் சபையினால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்களுக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் முறையாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் உள்ளிட்ட இக்காலப்பகுதியினுள் அரச நிறுவனங்களில் எவ்விதத்திலும் ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படுதலாகாது. எவ்வாறாயினும் , தேர்தல் பிரகடனம் செய்யப்படுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலர்களின் ஆட்சேர்ப்புக்கள்/பதவி உயர்வுகளோடு தொடர்புடைய நாடளாவிய ரீதியிலான வேலைத்திட்டமொன்று அல்லது உள்ளக பதவி உயர்வு செயல்முறையொன்று கால ஒத்திவைப்பின்றி செயற்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடு காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் அல்லது நிறுவனங்களின் தலைவர்கள் கருதுகின்றவிடத்தும் நாடு முழுவதற்கும் அமுலாகக் கூடிய விதத்தில் அரச சேவைக்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்படுகின்ற வேறு ஆட்சேர்ப்புக்கள்/பதவி உயர்வுகள் முறையாகவும் அரசியல் தலையீடுகள் இன்றியதாகவும் மேற்கொள்ளப்படுவதாக உரிய அலுவலர்களுக்கு உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றவிடத்தும் அதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஒருப்பாடு வழங்கப்படலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அதற்காக ஆணைக்குழுவுக்கு கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்து எழுத்திலான முன்னங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2.4. துப்பரவேற்பாடு, சுத்திகரிப்பு சேவைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளின் தடங்கல்களைத் தவிர்ப்பதற்கும் அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்கும் பிரதேச மட்டத்தில் அல்லது மாகாண மட்டத்தில் அரசாங்க ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதாயின், அத்தகைய ஆட்சேர்ப்புகளும் கூட தேர்தல் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதோடு எவ்வித அரசியல் தலையீடுமின்றி வெளிப்படைத் தன்மையுடன் கூடியதாக அத்தகைய பணிகளை ஆற்றும் பொறுப்பு உரிய அலுவலர்களைச் சாரும்.

2.5. தேர்தல் நடாத்தப்படவுள்ள பிரதேசங்களில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கென எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அலுவலர்களினதும் வழமையான இடமாற்றங்கள் வேட்புமனு கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்கள் கழியும் வரை இடைநிறுத்தப்படல் வேண்டும். தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படாத அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபனங்களின்/ சபைகளின் அலுவலர்கள்கூட தேர்தல் காலப்பகுதிக்குள் இடமாற்றம் செய்யப்படுமிடத்து, அரசியல் காரணங்களுக்காக இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுதலாகாதென்பதோடு, அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்காத விதத்தில் உரிய இடமாற்றங்களை மேற்கொள்ளல் அனைத்து அதிகாரிகளினதும் பொறுப்பாகும். முறையான ஒழுக்காற்றுக்

கட்டளைக்கமைய மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றங்களுக்கு இப்பணிப்பு செயல்வலுவுடையதாகக் காணப்படாதென்பதோடு, விசேட சந்தர்ப்பங்களில் அல்லது சேவையின் தேவைப்பாட்டுக்கமைய இடமாற்றங்களை மேற்கொள்ள வேண்டியவரின் அதுபற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்து முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

2.6. அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர் அல்லாத அரச அலுவலரொருவர் தனது தனிப்பட்ட சமூக வலைத்தளக் கணக்கொன்றை அல்லது வேறு கணக்கொன்றைப் பயன்படுத்தி ஏதேனும் அரசியல் கட்சியொன்றை அல்லது வேட்பாளரொருவரை ஊக்கப்படுத்துவதற்கு அல்லது பாதிப்பினை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்ற ஏதேனுமொரு பிரச்சாரத்தை அல்லது வெளிப்படுத்துகையை மேற்கொள்வது ஒரு குற்றமாகும், அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடைய அரச அலுவலர் ஒருவராயினும் அத்தகைய பிரச்சாரங்களையும் வெளிப்படுத்துகைகளையும் அரச வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளலாகாது என்பதோடு, தனிப்பட்ட, சமூக வலைத்தளக் கணக்குகள் மூலமாயினும் வெறுப்பூட்டத்தக்க வெளிப்படுத்துகைகள், பிழையான தகவல்கள் போலியான தகவல்கள் என்பவற்றைப் பரப்புதல் அல்லது பகிரங்கப்படுத்தல் ஒரு குற்றமாகும்.

2.7. தேர்லோடு தொடர்புடைய அரச ஆதனங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கென தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள பணிப்பொன்று அல்லது பணிப்புகள் மீறப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்கள் அல்லது முறைப்பாடுகள் தொடர்பாக மேலதிக விடயங்களை விசாரித்தறிதல் அவசியமென தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கின்றவிடத்து, அதற்குத் தேவையான அச்சு அல்லது இலத்திரனியல் ஆவணங்கள், கலந்துரையாடல், குறிப்புகள், அறிக்கைகள், ஆட்சேர்ப்புக்கள் அல்லது நியமனங்கள் வழங்குவதோடு தொடர்புடைய அறிக்கைகள் முதலிய தகவல்களை ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலரொருவருக்கு வழங்குமாறு கட்டளையிடப்படுகின்றவிடத்து, அத்தகைய தகவல்களை வழங்குவதற்கு அவ்வாவணங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஏதேனும் பணிப்பு அல்லது பணிப்புகள் மீறப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பம் தொடர்பாக மேலதிக விடயங்களை விசாரித்தறிவதற்கு வாய்மொழி மூல அல்லது எழுத்துமூல வெளிப்படுத்துகைகளை வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு அல்லது தேர்தல் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் கட்டளையிடுகின்றவிடத்து அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய வெளிப்படுத்துகைகளை வழங்குவதற்கு அவ்விடயங்களோடு தொடர்புடைய அரச அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு அவர்கள் கடப்பாடுடையவர்களாவர்.

2.8. தேர்தலுடன் தொடர்புடைய அரச ஆவணங்களில் துஷ்பிரயோகத்தோடு சம்பந்தப்பட்ட பணிப்புகளை மீறுதல் தொடர்பான விடயங்களை விசாரிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் எவரேனும அரச அலுவலருக்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு வருகை தருமாறு அழைப்பு விடுவிக்கப்படுமிடத்து அதற்காக வருகை தந்து தேவையான அனைத்து விடயங்களையும் தெளிவுபடுத்துவதற்கும் தேவைப்படக்கூடிய அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிப்பதற்கும் அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்ட அரச அலுவலர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு அவ்வலுவலர் கடப்பாடுடையவராவார்.

2.9. அரச அலுவலர்கள் அஞ்சல் மூல வாக்களிப்பின்போது வாக்குச்சீட்டை அல்லது வாக்களிப்பு நிலையத்தை புகைப்படம் எடுத்தல், காட்சிப்படுத்தல், காட்சிப்படுத்த இடமளித்தல் ஒரு குற்றமாகும்.

**03. வைபவங்கள், நடமாடும் சேவைகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகள்**

3.1. வைபவங்கள்

தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கப் பணத்தைச் செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறு வகையிலான அடிக்கல் நாட்டு விழாக்கள், திறப்பு விழாக்கள், மக்கள் கையளிப்பு நிகழ்வுகள் போன்ற வைபவங்களை அரசியல்வாதிகளின் பங்கேற்புடன் மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள் அவர்களினால் வெளிப்படுத்தப்படுவதாலும் இத்தகைய சந்தர்ப்பங்கள் வைபவ ரீதியாக நடாத்தப்படுவதனூடாக ஏதேனும் ஒரு கட்சி/ஒரு குழு/ வேட்பாளரொருவர் ஊக்குவிக்கப்படுதல் அல்லது வேறொரு கட்சிக்கு/குழுவுக்கு/ வேட்பாளருக்கு பாதிப்பு ஏற்படக்கூடுமாதலால் இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய வைபவங்களையும் கருமங்களையும் ஒழுங்கமைப்பதிலிருந்தும் நடாத்துவதிலிருந்தும் தவிர்ந்திருத்தல் வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்கு முன்னர் திகதி நிர்ணயிக்கப்பட்ட அத்தகைய வைபவங்களை இரத்துச் செய்ய அல்லது ஒத்தி வைக்க முடியாதவிடத்து, அத்தகைய வைபவங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட்டு அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். எவ்விதத்திலும் அரசாங்க நிதியை செலவிட்டு அத்தகைய வைபவங்கள் நடாத்தப்படுமாயின் அத்தகைய சந்தர்ப்பமொன்று எவையேனும் கட்சிகள்/குழுக்கள்/ வேட்பாளர்களின் ஊக்குவித்தலை அல்லது பாதிப்பை ஏற்படுத்துமாயின் அது தொடர்பாக வைபவத்தை ஒழுங்கமைத்த அலுவலர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதேபோன்று இத்தேர்தல் காலப்பகுதியில் நடாத்தப்படுகின்ற வைபவங்கள் தொடர்பாக கண்காணித்து அறிக்கைகளைப் பேணுவதற்காக உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களை முன்கூட்டியே

அறிவூட்டுவதற்கு இப்பணிகளை ஒழுங்கமைக்கின்ற அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இத்தகைய கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்கள் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்தத்தக்க அவ்வகையான வெளிப்படுத்துகையை மேற்கொள்ளல் செயற்பாடுகளை ஆற்றல் கொடிகள்/ பதாகைகள்/ சுவரொட்டிகள்/ பத்திரங்கள்/ துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தலும் பகிர்ந்தளித்தலும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அத்தகைய பணிகளை தடுப்பதற்கு உரிய வைபவங்களை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதியீட்டம் செய்கின்ற அரச நிறுவனங்களும் அலுவலர்களும் கடப்பாடுடையவர்களாவர்.

*3.2.* ***நடமாடும் சேவைகளும் வர்த்தக கண்காட்சிகளும்***

மக்களுக்கு சேவைகளை வழங்கும் நோக்கோடு அரசாங்க நிதியையும் அரச ஆதனங்களையும் செலவு செய்து நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் என்பவற்றினூடாக கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர் ஊக்குவிப்புகள் மேற்கொள்ளப்படும் போக்கு காணப்படுவதனால் இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய நடமாடும் சேவைகள் வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை ஒழுங்கமைப்பதிலிருந்தும் நடாத்துவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள், களியாட்டங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிட்டு அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். எந்த விதத்திலும் அரசாங்க நிதியை செலவழித்து இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை நிகழ்த்துகின்றபோது கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பு நிகழுமாயின் அதுதொடர்பில் உரிய பணியை ஒழுங்கமைத்த அலுவலர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதே போன்று தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்தப்படுகின்ற இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை கண்காணித்து அறிக்கைகளை பேணும் பொருட்டு உரிய மாவட்டங்களின் தெரிவத்தாட்சியலுவலர்களை முன்கூட்டியே அறிவூட்டுவதற்கு இப்பணிகளை ஒழுங்கமைக்கும் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இத்தகைய எந்த ஒரு நடமாடும் சேவை, வர்த்தக கண்காட்சி மற்றும் களியாட்டத்தில் அல்லது இத்தகையதொரு வேறு சந்தர்ப்பத்தில் கட்சிகள்/ குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்கான அல்லது பாதிப்புக்கான எத்தகைய வெளிப்படுத்துகையையும் மேற்கொள்ளல், செயற்பாடுகளை மேற்கொள்ளல், கொடிகள்/பதாகைகள்/சுவரொட்டிகள்/பத்திரங்கள்/துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தலும் பகிர்ந்தளித்தலும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதோடு, அத்தகைய நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு, பணிகளை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதி வழங்குகின்ற அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் கடப்பாடுடையவர்களாவர்.

*04.* **வசதிகள், கொடைகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விசேட கருத்திட்டங்களை அமுலாக்கம் செய்தல்**

*4.1.* மக்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்காக அல்லது நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நீண்டகால அல்லது நடுத்தர கால விஷேட கருத்திட்டங்களை அல்லது வசதிகள் வழங்கும் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்களை தேர்தல் காரணமாக இடைநிறுத்த முடியாத போதிலும் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டதன் பின்னர், அத்தகைய விஷேட கருத்திட்டங்கள் அல்லது தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்களூடாக கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்கப்படுத்தல் அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்த இடமளித்தலாகாது.

*4.2.* தேர்தல் காலப்பகுதிக்குள் அரச காணிகளைப் பகிர்ந்தளித்தல், காணிக் கச்சேரிகளை நடாத்துதல், அரச காணி உரித்துறுதிகள் அல்லது வீட்டுரிமை கையளிப்புக்கான உறுதிகளை வழங்குதல், பெருந்தோட்ட கைத்தொழிலுக்கான அல்லது பயிரிடுகைக்கான மானிய உதவிகள், பசளைகள், விவசாய உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், சமையலறைச் சாதனங்கள், வீட்டுத் தளபாடங்கள், சுய தொழில் உபகரணங்கள், மிதி வண்டிகள், சூரிய வலு மின்சார விளக்குகள், வீடுகளை நிருமாணிப்பதற்கான கட்டிடப் பொருட்கள் போன்றவற்றைப் பகிர்ந்தளிக்கும் கருத்திட்டங்கள், வீட்டுக்கடன் விநியோகங்கள்/நட்ட ஈட்டுத் தொகை வழங்கல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல் இடை நிறுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு இடைநிறுத்தப்படுவதனால் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தடங்கல் ஏற்படுமெனத் தெரியவருமாயின் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். எவ்விதத்திலும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது அனுமதி வழங்கப்படுகின்ற இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டியிருப்பின் அப்பணிகளை அவ்விடயங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களின் பங்குபற்றலோடு மாத்திரம் எவ்வித கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பு ஏற்படாதவாறு செயற்படுத்தல் அப்பணிகளுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் பொறுப்பான அலுவலர்களின் பொறுப்பாகும்.

*05.* **வாகனங்கள்**

*5.1.* அரசாங்கத்துக்கு உரித்தான மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள், கெப் வண்டிகள், பஸ் வண்டிகள் முதலான அனைத்து அரச வாகனங்களினதும், குழாமிற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் அவ்வாகனங்களை ஏதேனுமொரு அரசியல் கட்சியின்,

சுயேச்சைக் குழுவின், வேட்பாளரொருவரின் பிரசார நடவடிக்கைகளை ஊக்குவிப்புக்குப் பயன்படுத்தாத விதத்தில் தேர்தல் காலப்பகுதிக்குள் வாகன குழாமைப் பேணுவதையும் குறித்தொதுக்குவதையும் மிகக் கவனமாக மேற்கொள்ளல் வேண்டும். அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் (Assigned Vehicles) வாடகைக்குப் பெற்று கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்கள் (Hired Vehicle) என்பன கூட இதற்குள் உள்ளடக்கப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இக்காலப்பகுதிக்குள் அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் (Assigned Vehicles) தவிர முக்கியமாக குழாம்களுக்கு குறித்து ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கான ஓட்ட விவரக் குறிப்புகள் முறையாக பேணப்படல் வேண்டுமென்பதோடு, இந்தக் குறிப்புகளை பதவிநிலை அலுவலர் ஒருவர் அன்றாடம் பரீட்சித்து குறித்த வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதில்லை என்பது தொடர்பாக திருப்தியடைதல் வேண்டும். கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதாக போலியாக ஓட்ட விவரக் குறிப்புகளை எழுதி அரசாங்க வாகனங்களை அரசியல் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் அல்லது அத்தகைய சட்டவிரோத கருமங்களில் ஈடுபடுத்தப்படாமைக்கு வகை கூறுதல் வேண்டும்.

5.2. சனாதிபதி அவர்களின் பாதுகாப்பிற்காக குறித்தொதுக்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்கள் தவிர்ந்த எந்த வாகனத்திற்கும் போக்குவரத்துத் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்பட்ட அடையாள பதிவிலக்கம் இன்றி ஓட்டத்தில் ஈடுபட முடியாததாதலால், எந்தவோர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கும், இராஜாங்க அமைச்சருக்கும் அவர்களின் எவரேனுமோர் அமைச்சருக்கு அவரின் பணியாட்டொகுதி அங்கத்தினர்களுக்கு அல்லது வேறு எவருக்கும் உரிய பதிவு இலக்கமற்ற அரசாங்கத்தின் அல்லது அரச நிறுவனங்களின் வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. ஆதலால், அனைத்து திணைக்களங்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் உரித்தான வாகனங்கள் திருத்த நிலைய இலக்கங்களைப் பயன்படுத்தி அல்லது போலி இலக்கங்களை பயன்படுத்தி ஓட்டத்தில் ஈடுபடவில்லை என்பதை அமைச்சுக்களின் செயலாளர்கள்/ திணைக்களங்களின் தலைவர்கள் வசமுள்ள வாகனக் குழாமிற்குப் பொறுப்பான அலுவலர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

5.3. அரசியல் பிரச்சாரப்பணிகளுக்காக விமானங்கள், ஹெலிகொப்டர்கள் அல்லது வேறு வாகனங்களை ஈடுபடுத்துவதற்காக அரசாங்கப் பணம் செலவிடப்படுவதில்லை என்பதை அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களும் நிறுவனத் தலைவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

06. **அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசாங்கத்திற்குரித்தான ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியன.**

6.1. அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசுக்குரித்தான ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியன அரசின் வளங்களாகும். ஆதலால், அரசியல் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றை நடாத்துவதற்கு, இக்கட்டிடங்களைப் பயன்படுத்தலாகாது. வழமையான காலப்பகுதியில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும்/ குழுவுக்கும்/ வேட்பாளர் ஒருவருக்கும் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளக்கூடிய கட்டிடங்கள், மண்டபங்கள் தேர்தல் காலப்பகுதியில், உரிய முறையில் கட்டணம் அறவிடப்பட்டு எந்தவொரு கட்சிக்கும்/குழுவுக்கும் /வேட்பாளர் ஒருவருக்கும் பாரபட்சம் இன்றி வழங்கப்படுவதற்கு இவ்வேற்பாடுகளில் தடங்கல் இருப்பதாகக் கருதப்படலாகாது. தேர்தல் பிரச்சார பணிகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு, அரசாங்கத்துக்கு உரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் ஆகியவற்றையும் இலவசமாக வழங்குவது முற்றிலும் தடைசெய்யப்பட்டதாகும். அரசாங்கத்திற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு உரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் போன்றவை எந்தவோர் அரசியல்வாதிக்கும் அலுவலருக்கும் வேறொரு நபருக்கும் தேர்தல் காலப்பகுதிக்குள் முழுக் காலத்துக்குமென குறித்தொதுக்கிக் கொடுக்கப்படுவதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். அதேபோன்று அத்தகைய இடங்களில் தரித்திருக்கின்ற நபர்கள் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட இடமளிக்கப்படலாகாது. அரசாங்கத்திற்கு உரித்தான கட்டிடங்களிலும் அவை அமையப்பெற்றுள்ள காணிகளிலும் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பாரிய அளவிலான உருவப்படங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தவும் இடமளித்தலோ களஞ்சியப்படுத்தலோ ஆகாது.

6.2. அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகுளுக்குரித்தான விளையாட்டு மைதானங்கள், வெற்றுக் காணிகள், மண்டபங்கள் அல்லது அத்தகைய வேறு கட்டிடங்கள் ஒவ்வோர் அரசியல் கட்சிச்/ சுயேச்சைக் குழு/ வேட்பாளரை ஊக்குவிப்பதற்கான பிரச்சாரக் கூட்டங்களுக்காக குறித்தொதுக்கிக் கொடுக்கப்படும் போது எந்தவொரு கட்சிக்கோ சுயேச்சைக் குழுவுக்கோ வேட்பாளருக்கோ விசேட கவனிப்பு அல்லது முக்கியத்துவம் அல்லது கவனிப்புக் குறைவு ஏற்படத்தக்கவாறு குறித்தொதுக்கப்படலாகாது. அத்தகைய இடங்கள், கட்டிடங்கள் என்பவற்றைக் குறித்தொதுக்குதல் வெளிப்படைத்தன்மையுடன் கூடியதாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய இடங்களை ஏனைய கட்சியொன்றிற்கு/ குழுவொன்றிற்கு / வேட்பாளரொருவருக்கு பெற்றுக் கொள்ள மு டியாதவாறு எந்தவொரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு அல்லது வேட்பாளருக்கு வேறு பணிகளுக்காக தொடர்ச்சியாக குறித்தொதுக்கி வைத்துக்கொள்ளப்படலாகாது.

07. **பொதுவான விடயங்கள்**

7.1. *அரசாங்க ஆதனங்கள் முக்கியமாக அரசாங்க நிறுவனங்கள், வாகனங்கள், பொருட்களாதியவை கட்டிடங்கள், காணிகள் மற்றும் அலுவலர்கள் தேர்தலோடு தொடர்புடைய கட்சிகள்/குழுக்கள் அல்லது வேட்பாளர் ஊக்குவிப்புக்காக பயன்படுத்தப்பட எந்தவொரு சந்தர்ப்பமும் வழங்கப்படலாகாது. தேர்தல் நடாத்தப்படுகின்ற பிரதேசங்களில் அவசரக் கடமைகளுக்காக விசேட அபிவிருத்தித் திட்டங்களின் அமுலாக்கம் போன்றவற்றை முன்வைத்து கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்குவிப்பை (அன்றேல் பாதிப்பை ஏற்படுத்துவதற்காக) அரசாங்கத்தின்/ அரச நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு/ அரச நிறுவனங்களுக்கு சொந்தமான அல்லது வாடகைக்கு அமர்த்திய வாகனங்களை வேறு அலுவலகங்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு இணைத்தல் அல்லது விடுவித்தல் போன்ற சட்ட ரீதியற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள எந்தவோர் அலுவலருக்கும் இடமளிக்கக் கூடாது. அரசாங்கத்தின், மாகாண சபைகளின், உள்ளூர் அதிகார சபைகளின் அல்லது அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரசாங்க வங்கிகள், நியதிச்சட்ட வேறு நிறுவனங்கள், அரச பல்கலைக்கழகங்கள் போன்ற எந்தவோர் அரச நிறுவனத்துக்கும் உரிய ஊடகப் பிரிவின் அலுவலர்கள், வாகனங்கள், கருவிகள் எந்தவொரு கட்சியினதும்/குழுவினதும்/வேட்பாளர்களினதும் ஊக்குவிப்பை மேம்படுத்துகின்ற பணிகளுக்காக ஈடுப்படுத்தக்கூடாது. பொதுவான நிலைமையின் கீழ் எந்தவொரு அரசாங்க நிறுவனத்திற்கும் உரிய மேடைகள், சோடனைகள், கருவிகள், வாகனங்கள், விமானங்கள், ஹெலிகொப்டர்கள் போன்றவை வாடகை அடிப்படையில் வழங்கப்படுவதாயின் தேர்தல் காலத்துக்குள் அத்தகைய வாடகைக்கு வழங்கப்படல் அனைத்து கட்சிகள்/குழுக்களும் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு வெளிப்படைத் தன்மையுடன் கூடியதாக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.*

7.2. *அரசாங்க அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவோ அல்லது ஏதேனும் வருடாந்த/ நினைவு தின வைபவங்கள் ஆகியவற்றுக்காகவோ பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசாங்கப் பணத்தை ஈடுபடுத்தி தொலைக்காட்சி, வானொலி, செய்திப் பத்திரிகைகள் போன்ற ஊடகங்களூடாக அறிவித்தல் ஒலி/ஒளிபரப்பு /பிரசுரித்தல் மூலமாகவோ பிரசார அறிவித்தல் பலகைகளை பகிரங்க இடங்களில் காட்சிப்படுத்தல் மூலமோ எந்தவொரு கட்சி/குழு/வேட்பாளர் சார்பாகவும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளையோ பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையோ மேற்கொள்ளலாகாது.*

7.3. *அனைத்து தனியார் கேபிள் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள், தனியார் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள், இணையத்தளங்கள், கையடக்க மற்றும் நிலையான தொலைபேசிச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் என்பன தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் சட்டங்களை மீறாத விதத்திலும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக வழிகாட்டி நெறிகள், பணிப்புகள் மற்றும் அறிவுறுத்தல் சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் நடந்து கொள்வதற்கு வகை கூறுதல் மேற்குறித்த தொடர்பாடல் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தும் பொறுப்பினை வகிக்கின்ற ஊடக அமைச்சின் செயலாளர்களினதும் தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவின் தவிசாளர்/பணிப்பாளர் நாயகத்தினதும் பொறுப்பொன்றாகவிருத்தல் வேண்டும்.*

7.4. *கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்களை ஊக்குவிக்கும் அல்லது பாதிக்கும் விதத்தில் தெரு விளக்குக் கம்பங்கள் மற்றும் தொலைபேசி கம்பித் தூண்கள் என்பவற்றில் பதாகைகள், சுவரொட்டிகள், கொடிகள் என்பவற்றை காட்சிப்படுத்தல் மற்றும் ஏனைய சோடனைகள் என்பவற்றை மேற்கொள்வதைத் தடுப்பது போன்றே பெருந்தெருக்கள் மீதும் இரு மருங்கிலும் உள்ள பாதசாரிகள் மேடைகள் மீதும் கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களை ஊக்குவிக்கும் விதத்திலோ அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் விதத்திலோ வர்ண மைப் பூச்சுக்களைப் பூசுதல் மூலமோ அல்லது டிஜிட்டல் அல்லது இலத்திரனியல் பலகைகள் போன்ற முறையிலோ பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர்ப்பதற்குரிய அதிகார எல்லைக்குரிய அந்த அரசாங்க ஆதனங்களின் உரித்துரிமை அல்லது நிருவாகம் உரித்தான அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களின்/மாகாண அல்லது பிரதேச தலைவர்களின் மற்றும் மாநகர முதல்வர்/தவிசாளர்/மாநகர ஆணையாளர்/செயலாளர் மற்றும் அந்தந்த பிரிவுத் தலைவர்களின் பொறுப்பாகும்.*

7.5. *ஏதேனும் ஓர் அமைச்சு, திணைக்களம் அல்லது அரச நிறுவனம் தேர்தல் காலப்பகுதிக்கு முன்னர் நிர்மாணித்திருந்த அல்லது காட்சிப்படுத்தியிருந்த கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்குக் காரணமாகக் கூடிய விதத்தில் பகிரங்க இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள புகைப்படங்கள், பிரச்சாரப் பலகைகள், கொடிகள், பதாகைகள், சோடனைகள் ஆகியவற்றை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்துவதிலிருந்து அகற்றுவதற்கு அவ்வரச நிறுவனங்களின் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நமது உள்ளூர் அதிகார சபை எல்லைக்குள் பகிரங்க இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்சிகள்/குழுக்கள்/ வேட்பாளர் ஊக்குவிப்பு பிரச்சார பலகைகள், கொடிகள், பதாகைகள் மற்றும் சோடனைகள் ஆகியவற்றை அகற்றுவதற்கு உள்ளூர் அதிகார சபைகளின் தலைவர்கள் அந்நிறுவனங்களின் ஆணையாளர்களும் செயலாளர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

7.6. *தேர்தலொன்றின்போது கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் என்பவற்றிற்காக அரச ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் விதத்திலான இப்பணிப்பு எத்தகைய தளர்த்தலுக்கும் இடமின்றி கடுமையாக அமுலாக்கப்படுதல் வேண்டும். ஒவ்வோர் அமைச்சின் கீழுள்ள அனைத்துத்*

திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேபோன்று அத்தகைய அனைத்து நிறுவனங்களினதும் அலுவலர்கள் இவ்வறிவுறுத்தல்களுக்கும் பணிப்புகளுக்கும் அமைவாக செயற்படுகின்றனரா என்பதை அமைச்சுக்களின் செயலாளர்களும் நிறுவனங்களின் தலைவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் அத்தியாவசியமானதாகும்.

7.7. தேர்தலோடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் உரிய சட்ட வலுவாக்கத்திற்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரச அதிகாரிகளினதும் பணியாக இருக்க வேண்டுமென அரசியலமைப்பின் 104ஆ.(2) ஆம் உப உறுப்புரையில் காணப்படுகின்ற இக்குறிப்பீடு தொடர்பாக அரச அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுதல் அவசியமாகும்.

7.8. இப்பணிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களின் பணியாளர்கள், ஆகியோரை அறிவூட்டுதல் அமைச்சின் செயலாளருக்குக் கையளிக்கப்படுவதோடு, மாகாண சபைகளின் ஆளுநர்களை அறிவூட்டுதல் பிரதம செயலாளர்கள் மற்றும் ஏனைய மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களின் பொறுப்பாகுமென்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

7.9. ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு இப்பணிப்புகள் தொடர்பாக அறிவூட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7.10. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக, அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/நிறுவனங்களின் தலைவர்கள் பிரதான கணக்கீட்டு அலுவலர்களாகவும் அல்லது கணக்கீட்டு அலுவலர்களாகவும் உள்ளமையால், அரசாங்கத்திற்குரிய ஆதனங்களின் முறையற்ற துஷ்பிரயோகத்தை தவிர்ப்பது உரிய அலுவலர்களுக்குக் கையளிக்கப்படுகின்ற ஒரு பொறுப்பாகும்.

7.11. இப்பணிப்புகளுக்கு அமைவாக நடந்தொழுகாமை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104எஎ ஆம் உறுப்புரைக்கமைய தண்டனைக்குரிய ஒரு குற்றமென்பதும் குறிப்பிடப்படுகிறது.

இப்பணிப்புகளில் அரசாங்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்ட சபைகள், அரச வங்கிகள், அரச பல்கலைக்கழகங்கள், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ள கம்பனிகள் என்ற அனைத்து நிறுவனங்கள் மற்றும் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்குகளை அரசாங்கம் அல்லது அரச கம்பனிகளுக்கு உரித்தான நிறுவனங்கள் எனப் பொருள்படும்.

அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் என இடப்பட்டுள்ள ஒவ்வோர் இடத்திலும் முன்பு குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டவர்களுமான வேதனமொன்றையோ படியொன்றையோ பெற்றுக் கொள்கின்ற அனைவரும் எனப் பொருள்படும்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட 2019.09.19 ஆந் தேதிய 2141/52 ஆம் இலக்க மற்றும் 2019.10.13 ஆந் திகதிய 2143/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகின்றன.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.